முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

**முன்னிலை: திருமதி.எம்.சுமதி சாய் பிரியா, M.A., M.L., P.G.D.P.M., & I.R.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2022-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08-ம் நாள் வியாழக்கிழமை.

**S.O.P.No.70/2022**

*(CNR.No.TNSV01005165/2022)*

RM.அழகப்பன் ... மனுதாரர்

/எதிர்/

1. கோயம்புத்தூர் கேபிடல் லிமிடெட்.,
2. பி.பழனியப்பன் ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 01.12.2022-ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் A.தினேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று நீதிமன்றம் வழங்கும் . . .

**உ த் த ர வு-**

இந்த மனுதாரர் காலம் சென்ற RM.நாச்சம்மையின் வாரிசு என்றும், மேற்படி RM.நாச்சம்மைக்கு சேர வேண்டிய ரூ.54,80,549/- மதிப்புள்ள பங்குகள் மற்றும் எஸ்டேட்கள், செக்யூரிட்டிகள் ஆகியவற்றை பெற ஏதுவாக மனுதாரர் பெயரில் வாரிசுரிமை சான்றிதழ் வழங்க வேண்டியும் மனுதாரரால் இந்திய வாரிசுரிமை சட்டம், 1951 பிரிவு 372-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M SUMATHI SAI PRIYA Digitally signed by M SUMATHI SAI PRIYA Date: 2022.12.08 18:22:28 +0530

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

இந்த மனுதாரர்தான் இறந்துபோன RM.ராமநாதன் மற்றும் RM.நாச்சம்மை தம்பதியினருக்கு ஒரே வாரிசுதாரர் என்றும், மேற்படி RM.ராமநாதன் கடந்த 02.11.2000-ம் தேதியன்றும், RM.நாச்சம்மை கடந்த 15.04.2018-ம் தேதியன்றும் இறந்துவிட்டதாகவும், மேற்படி இறந்துபோன RM.நாச்சம்மை உயிருடன் இருக்கும் காலத்தில் எந்தவொரு உயில் சம்பந்தமான ஆவணங்களை நிறைவேற்றவோ, ரத்து செய்யவோ இல்லை என்றும், மேலும் மனுதாரரின் தாயாரான RM.நாச்சம்மை, 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சில பங்குகள் வாங்கியுள்ளார் என்றும், மேற்படி பங்குகளை RM.நாச்சம்மை வாங்கும்போது வாரிசு சான்றிதழ் போன்ற எந்தவொரு முறையான ஆவணங்களையும் மேற்படி நிறுவனத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அதுபோல் பங்குகள் வாங்கும் நேரத்தில் மேற்படி RM.நாச்சம்மைக்கு எந்த பொறுப்புகளும் இல்லை என்றும், மேற்படி 2-ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் தாய்மாமன் மகன் என்றும், மேற்படி 2-ம் மனுதாரரின் தகப்பனார் இறந்துபோன RM.நாச்சம்மைக்கு உடன்பிறந்த சகோதரர் என்றும், மேற்படி RM.நாச்சம்மை, 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பங்குகளை வாங்கும்போது, இந்த மனுதாரர் தெற்கு இரயில்வே டெல்லி மண்டலத்தில் பயிற்சியில் இருந்த காரணத்தினால், 2-ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான இறந்துபோன பழனியப்பனை அவரது பங்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொறுப்பாளராக(Nominee) நியமித்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி பங்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொறுப்பாளராக(Nominee) இருந்த பழனியப்பன் கடந்த 08.08.2018-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன பழனியப்பனுக்கு இந்த

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:22:39 +0530

2-ம் எதிர்மனுதாரர்தான் ஒரே வாரிசுதாரர் என்பதால் இந்த மனுவில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், மற்றபடி இந்த 2-ம் எதிர்மனுதாரருக்கும், மேற்படி பங்குகளுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இந்த மனுதாரர்தான் RM.நாச்சம்மைக்குரிய அனைத்துச் சொத்துக்களுக்கும், இதர ஆவணங்களுக்கும் மற்றும் அனைத்துவிதமான பங்குகளுக்கும் ஒரே வாரிசுதாரர் என்றும், எனவே மனுதாரருக்கு சேர வேண்டிய ரூ.54,80,549/- மதிப்புள்ள பங்குகள் மற்றும் எஸ்டேட்கள், செக்யூரிட்டிகள் பெற மனுதாரருக்கு வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், இம்மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**4)** இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் RM.அழகப்பன் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5)** இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்.

**6)** மனுதாரர் தரப்பில் மனுதாரர் RM.அழகப்பன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது தனது நிரூபண வாக்குமூலத்தில், 29.05.2019-ம் தேதிய RM.நாச்சம்மையின் இறப்புச் சான்றிதழின் நகல்(அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.1 ஆகவும், 03.10.2019-ம் தேதிய RM.நாச்சம்மையின் வாரிசுச் சான்றிதழின் நகல்(அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.2

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:22:49 +0530

ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.3 ஆகவும், 08.12.2010-ம் தேதிய மனுதாரரின் தந்தை M.ராமநாதனின் இறப்புச் சான்றிதழின் நகல்(அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.4 ஆகவும், 30.11.2020-ம் தேதிய 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் RM.நாச்சம்மை பங்குகள் வாங்கியதற்கான கணக்கு விபரப்பட்டியலின் இணையதள நகல் ம.சா.ஆ.5 ஆகவும், 11.10.2018-ம் தேதிய 2-ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் பழனியப்பனின் இறப்புச் சான்றிதழின் நகல்(அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.6 ஆகவும், 07.03.2019-ம் தேதிய பழனியப்பனின் வாரிசுச் சான்றிதழின் நகல்(அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் காலம் சென்ற RM.நாச்சம்மை அவர்களின் வாரிசு என்றும், மேற்படி RM.நாச்சம்மைக்கு சேர வேண்டிய ரூ.54,80,549/- மதிப்புள்ள பங்குகள் மற்றும் எஸ்டேட்கள், செக்யூரிட்டிகள் ஆகியவற்றை பெற ஏதுவாக வாரிசு உரிமை சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**7)** மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.1 சாட்சியத்தையும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆர்.எம்.நாச்சம்மை 15.04.2018 அன்று இறந்தது குறித்து முன்னிடப்பட்ட இறப்புச் சான்றான ம.சா.ஆ.1, மு.இராமநாதன் 02.11.2000 அன்று இறந்தது குறித்து முன்னிடப்பட்ட இறப்புச் சான்றான ம.சா.ஆ.4 மற்றும் மனுதாரர் அழகப்பன் மேற்படி ஆர்.எம்.நாச்சம்மையின் ஒரே வாரிசு என்ற வகைக்கு முன்னிடப்பட்டிருந்த அவரது வாரிசு சான்று ஆகியவற்றை பரிசீலித்ததில், மு.ராமநாதன் - ஆர்.எம்.நாச்சம்மை தம்பதியினருக்கு இந்த மனுதாரர் மட்டுமே ஒரே வாரிசு என்பதையும் அறிய முடிகிறது. ம.சா.ஆ,3-ஐ பரிசீலித்ததில், இந்த

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:22:59 +0530

மனுதாரரின் தற்போதையா விலாசம், தகப்பனார் பெயர் ஆகிய விவரங்களை அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக ம.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், இறந்துபோன RM.நாச்சம்மை, 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் INE030A01207, INE565A01014, INE330H01018, INEE002A01018 என்ற கணக்குகளில் பங்குகள் வாங்கியிருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. 2-ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் பழனியப்பன் அதாவது ஆர்.எம்.நாச்சம்மையின் சகோதாரர் மற்றும் அவர் மேற்படி பங்குகளை வாங்கியபோது தனது நாமினியாக சொல்லியிருந்த மனுதாரரின் மாமா கடந்த 08.08.2019-ம் தேதி இறந்துவிட்டதையும், அந்த பழனியப்பனுக்கு இந்த 2-ம் எதிர்மனுதாரர்தான் வாரிசு என்பதும் ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**8)** இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், இந்நீதிமன்றம் 12.10.2022-ம் தேதியன்று அறிவுறுத்தியபடி இம்மனுவிற்கு ஏதேனும் ஆட்சேபணை எவருக்கேனும் இருப்பின் இம்மாவட்டத்தில் ஆஜராகி தெரிவிக்க வாய்ப்பளிக்கும் வகையில், மனுதாரர் தரப்பில் 01.11.2022-ம் தேதியன்று தினக்குரல் தினசரி நாளிதழில் பக்கம் 5-ல் பொது அறிவிப்பு விளம்பரமாக கொடுக்கப்பட்டிருந்தது குறித்து 16.11.2022-ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் குறிப்பாணை முன்னிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக மேற்படி பொது அறிவிப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபணை ஏதும் இருப்பில் 16.11.2022-ம் தேதியன்று விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்கலாம் என்று சொல்லப்பட்டிருந்த நிலையில், அன்று இம்மனு குறித்து விசாரணையின் போது எவரும் ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:23:07 +0530

**9)** மேலும், இம்மனுதாரரின் தாயாரான திருமதி.RM.நாச்சம்மை, 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பங்குகளை வாங்கும்போது, இந்த மனுதாரர் தெற்கு இரயில்வே டெல்லி மண்டலத்தில் பயிற்சியில் இருந்த காரணத்தினால், 2-ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான இறந்துபோன பழனியப்பனை அவரது பங்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொறுப்பாளராக(Nominee) நியமித்துள்ளார் என்பதையும், அதனால் மேற்படி பங்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பழனியப்பன் இறந்துவிட்ட காரணத்தினால், அவரது மகனான 2-ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கவனிக்கத் தவறவில்லை.

**10)** எனினும், மனுதாரர் தன் நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கோரியுள்ளபடி தன் தாயார் ஆர்.எம்.நாச்சம்மையின் தோட்டங்கள், பத்திரங்கள் மற்றும் அவரது பங்குகளை பொறுத்து தான் சட்டப்பூர்வ வாரிசு என ஒரே உத்தரவாக வாரிசுரிமைச் சான்றினை இந்நீதிமன்றம் வழங்க இயலாது என சுட்டிக் காட்ட விரும்புகிறது. ஏனெனில், இம்மனுவில் ஆர்.எம்.நாச்சம்மை பெயரில் இருக்கக் கூடிய இதரச் சொத்துக்கள் பற்றிய விவரங்கள் ஏதும் குறிப்பாக சொல்லப்பட்டிருக்கவில்லை. மேலும், அதுபோன்று ஒரு உத்தரவு பெறுவதற்கு மனுதாரர் தன்னை தன் தாயார் ஆர்.எம்.நாச்சம்மைக்கு சட்டப்படியான ஒரே வாரிசு என விளம்புகைக் கோரி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். மாறாக வாரிசுரிமைச் சான்றுக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அதுபோன்று பொதுவான ஒரே உத்தரவு வழங்க இயலாது.

**11)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு, மேற்படி மனுதாரரின் தகப்பனார் மற்றும் தாயாரான RM.ராமநாதன் மற்றும் RM.நாச்சம்மை இருவரும்

M SUMATHI SAI PRIYA Digitally signed by M SUMATHI SAI PRIYA Date: 2022.12.08 18:23:17 +0530

02.11.2000 மற்றும் 15.04.2018 ஆகிய தேதிகளில் இறந்துவிட்டதையும், மேற்படி இறந்துபோன RM.ராமநாதன் மற்றும் இறந்துபோன RM.நாச்சம்மை தம்பதியினருக்கு இந்த மனுதாரர்தான் ஒரே வாரிசு என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி RM.நாச்சம்மை 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் INE030A01207, INE565A01014, INE330H01018, INEE002A01018 என்ற கணக்குகளில் பங்குகள் வாங்கியிருப்பதை கருத்தில் கொண்டும், அதிலும் குறிப்பாக இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், தினக்குரல் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்தும், ஆட்சேபணையாளர்கள் யாரும் ஆஜரில்லாத நிலையிலும், இந்த மனுதாரர் கோரியவாறு அவரது தாயார் RM.நாச்சம்மை 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வாங்கியிருந்த பங்களுக்கான தொகையை பெறத்தக்கவர் என்பதால், அதனைப் பொறுத்து வாரிசுரிமைச் சான்று வழங்கவது மனுப் பொருண்மைகளின்படி சரியாக இருக்கும் என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

***முடிவில்,*** *மனுதாரர் இறந்துபோன RM.நாச்சம்மையின் வாரிசு என்பதால், மனு குறிப்பிடும் 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனுதாரரின் தாயார் வாங்கியிருந்த பங்குகளைப் பொறுத்த தொகை ரூ.45,20,069/-ஐ (ம.சா.ஆ,5-ல் கண்டபடி) வட்டியுடன் சேர்த்து மனுதாரர் பெறத்தக்க வகையில் வாரிசுரிமைச் சான்று வழங்க உத்தரவிடப்படுகிறது.*

இந்த உத்தரவு 2022-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08-ம் நாள் என்னால் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M SUMATHI SAI PRIYA
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:23:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-</u>**

ம.சா.1 - RM.அழகப்பன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 29.05.2018 | R.M.நாச்சம்மையின் இறப்புச் சான்றிதழின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.2 | 03.10.2019 | R.M.நாச்சம்மையின் வாரிசுச் சான்றிதழின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.3 | --- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.4 | 08.12.2010 | மனுதாரரின் தந்தை ராமநாதனின் இறப்புச் சான்றிதழின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.5 | 30.11.2020 | 1-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஸ்டேட்மெண்ட் இணையதள நகல். |
| ம.சா.ஆ.6 | 11.10.2018 | பழனியப்பனின் இறப்புச் சான்றிதழின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.7 | 07.03.2019 | பழனியப்பனின் வாரிசுச் சான்றிதழின் நகல் (அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை.

M SUMATHI SAI PRIYA

Digitally signed by M SUMATHI SAI PRIYA
Date: 2022.12.08 18:23:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.

**<u>SOP.No.70/2022</u>**

சீரான / வரைவு ___ உத்தரவு
<u>நாள்: 08.12.2022</u>